DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Principal Sessions Judge, Virudhunagar District at Srivilliputtur.

SPL.C.C.No. 8/2025

Deposition of witness for Prosecution/Defence/Court : P.W.7

Accused present

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.நல்லகணேஷ்ராம் | Caste | : |
| Father's /Husband's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the 02nd day of December, 2025.

முதல் விசாரணை

நான் தற்போது இராஜபாளையம் தாலுகா நல்லமநாயக்கன்பட்டி பஞ்சாயத்து என். புதூரில் குடியிருந்து வருகிறேன். கடந்த 2010ம் ஆண்டு நான் நல்லமநாயக்கன்பட்டி பஞ்சாயத்தில் 5 வது வார்டு உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டேன். அந்த சமயம் பஞ்சாயத்து தலைவராக ஆஜர் எதிரி தங்கம் அவர்கள் இருந்து வந்தார்.

எங்கள் பஞ்சாயத்தில் 2012ம் வருடம் சூரிய ஒளி மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் திட்டத்தின் கீழ் 8 பயனாளிகளுக்கு வீடுகள் ஒதுக்கப்பட்டது. 16.07.2012ம் தேதி நடைபெற்ற சிறப்பு கிராம சபை கூட்டத்தில் நான் உட்பட மற்ற உறுப்பினர்கள் பங்கெடுத்துக்கொண்டோம். அந்த கூட்டத்தில் தேர்வு செய்யப்பட்ட மேற்சொன்ன 8 பயனாளிகளில் 3 நபர்கள் இசக்கிமுத்து, மகாலட்சுமி, மாரியம்மாள் ஆகியோர்கள் தகுதியில்லாதவர்கள் எனத் தெரிந்து நாங்கள் முறையிட்டோம். அதற்கு பஞ்சாயத்து தலைவரான ஆஜர் எதிரி பதில் எதுவும் சொல்லவில்லை. அதனைத்தொடர்ந்து மேற்சொன்ன இசக்கிமுத்து

அவர்களுக்கு ஏற்கனவே சொந்தமாக வீடு இருப்பதாலும், மகாலட்சுமி மற்றும் மாரியம்மாள் ஆகியோர்கள் வெளியூரில் குடியேறி வசித்து வருவதாலும், அவர்களுக்கு நல்லமநாயக்கன்பட்டி பஞ்சாயத்தில் வீடு ஒதுக்கமுடியாது என்று வட்டார வளர்ச்சி அலுவலர் அவர்களிடம் எடுத்துரைத்தோம்.

வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.நாகஜோதி என்பவர் மேற்சொன்ன 3 பயனாளிகள் குறித்து ஆய்வு செய்து அவர்கள் தகுதியில்லாதவர்கள் என தெரிந்து அவர்களுக்கான வீடு கட்டுவதற்கான வேலை உத்தரவினை ரத்து செய்தார்.

அதன்பின்னர் நல்லமநாயக்கன்பட்டி பஞ்சாயத்து சார்பில் தகுதியான வேறு 3 பயனாளிகளான இந்த வழக்கின் புகார்தாரர் மாரியம்மாள், நாகராஜ், மற்றும் இராமலிங்காபுரத்தை சேர்ந்த பொன்னுச்சாமி ஆகியோர்களை தேர்வு செய்து அவர்கள் வீடு கட்டுவதற்கான வேலை உத்தரவு வழங்கப்பட்டது.

அதைத்தொடர்ந்து வேலை உத்தரவு பெற்ற திருமதி. மாரியம்மாள் ஒரு நாள் நான் பஞ்சாயத்து அலுவலகத்தில் பஞ்சாயத்து தலைவரான ஆஜர் எதிரியுடன் பேசிக்கொண்டிருந்த போது திருமதி. மாரியம்மாள் பஞ்சாயத்து அலுவலகத்திற்கு வந்தார்கள். அவர் வேலை உத்தரவிற்காக பாண்ட் பேப்பரில் பஞ்சாயத்து தலைவரான ஆஜர் எதிரியிடம் கையொப்பம் பெறுவதற்காக வந்தார். மாரியம்மாள் ஆஜர் எதிரியிடம் கையொப்பம் கேட்டபோது ஆஜர் எதிரி அவரிடம் பஞ்சாயத்து எழுத்தர் இல்லை என்றும் வேறு ஒரு நாள் வாருங்கள் என்று சொன்னார்.

அதன்பின்னர் மறுநாள் திருமதி. மாரியம்மாள் என்னிடம் ஆஜர் எதிரியிடம் கையெழுத்து வாங்கித்தரும்படி என்னிடம் சொன்னார். நான் பஞ்சாயத்து கிளார்க் அலுவலகத்தில் இருந்தால் நீங்கள் சென்று பாருங்கள் என்று சொன்னேன். அதற்கு மறுநாள் திருமதி.மாரியம்மாள் என்னிடம் லஞ்ச ஒழிப்பு அலுவலகம் எங்கு உள்ளது என்னிடம் கேட்டபோது நான் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ளது என்று அவரிடம் கூறினேன். எதற்கு என்று நான்

அவரிடம் கேட்டபோது திருமதி. மாரியம்மாள் என்னிடம் ஒன்றும் சொல்லவில்லை. இது சம்பந்தமாக விருதுநகர் ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் அவர்கள் என்னை விசாரித்தார்.

**(சாட்சியை பகுதி பிறழ்சாட்சியாக மாற்ற அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது)**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை)**

போலிசார் விசாரணையில் 15.11.2012 ம் தேதி மதியம் 1.00 மணியளவில் நான் நல்லமநாயக்கன்பட்டி பஞ்சாயத்து அலுவலகத்தில் ஆஜர் எதிரியுடன் பேசிக்கொண்டிருந்தபோது திருமதி.மாரியம்மாள் என்பவர் அவரது வேலை உத்தரவினை செயல்படுத்துவதற்கான பாண்ட் பேப்பரில் கையொப்பம் செய்ய ஆஜர் எதிரியை கேட்டதாகவும், அதற்கு ஆஜர் எதிரி ரூ.10,000/- தனக்கு கொடுத்தால் தான் கையொப்பம் செய்ய முடியும் என்று சொன்னதாகவும், அதற்கு மாரியம்மாள் பால்வியாபாரம் செய்து பிழைத்து வருவதாக சொல்லி கொஞ்சம் குறைத்துக்கொள்ளும்படி எதிரியிடம் கேட்டபோது அவர் கண்டிப்பாக ரூ. 10 ஆயிரம் கொடுத்தால் தான் கையொப்பம் செய்வேன் என்று சொன்னதாகவும், அதனைத்தொடர்ந்து மாரியம்மாள் என்னை தனியாக பார்த்து தன்னிடம் ரூ.10 ஆயிரம் இல்லை என்றும் , ஆஜர் எதிரியிடம் தனக்காக பேசும்படியும், என்னிடம் கேட்டபோது நான் பேசுகிறேன் என்று சொன்னதாகவும் சொல்லிவிட்டு தற்போது எதிரியுடன் நான் வேலை பார்த்த காரணத்தினால் எதிரியின் வேண்டுகோளுக்கு இணங்க அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரி தரப்பு குறுக்குவிசாரணை - இல்லை.</u>

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

Principal District and Sessions Judge,
Virudhunagar District at
Srivilliputtur.